இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர் : 140
இதழ் : 13
பக்கங்கள் : 08
திகதி: 07.08.2016
விலை : 20.00

# தியாகங்கள், விட்டுக்கொடுப்புகள் இல்லாத புதுப்பித்தலுக்குத் தயாராக வேண்டாம்!

## யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் முன்னெச்சரிக்கை



எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின்போது எடுக்கப்படவுள்ள பல புதுப்பித்தல் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால் பல விட்டுக்கொடுப்புக்களும் தியாகங்களும் இன்றியமையாதவை. இவைகள் இல்லாத ஒரு புதுப்பித்தலுக்குத் தயாராக வேண்டாம் என்று யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஜீலை மாதம் 24ம் திகதியன்று இரணைப்பாலை பங்கில் நடைபெற்ற பங்குமட்டக் கருத்தமர்வின்போது உரையாற்றும்போதே குருமுதல்வர் மேற்கண்டவாறு கூறினார். பங்குமட்டக் கருத்தமர்வுகளின்போது மக்கள் மிகவும் ஆர்வத்தோடு கலந்துகொள்வதையிட்டும், புதப்பித்தலுக்குத் தேவையான பல ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைப்பதையிட்டும் தாம் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்த அவர், இக்கருத்துக்களுக்குச் செயல்வடிவம் கொடுக்கும்போது பல தியாகங்களை, விட்டுக்கொடுபபுக்களைச் செய்து வேதனை

(7ம் பக்கம் பார்க்க...)

## யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் பங்குமட்டக் கருத்தமர்வுகளின்போது தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்கள்

### அதிகமான ஆடம்பரங்களால் வழிபாடுகளில் பக்தி இல்லை
### இரணைப்பாலை மக்கள் கவலை

திருநாள், பெருநாள் காலங்களில் உடையலங்காரம், வெளியலங்காரம் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் இத்தினங்களில் நடைபெறும் வழிபாடுகளின்போது இறைவனோடு ஒன்றிக்கமுடியாத நிலை ஏற்படுவதாக இரணைப்பாலை பங்குமக்கள் தெரிவித்தார்கள். அத்தோடு சாதி அடைப்படையிலான புறக்கணிப்புக்கள் கைவிடப்படவேண்டியதன் அவசியமும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

### பிரிவினை சபைகளால் எமது விசுவாசத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது
### கொக்குவில் புனித பவுல் ஆலய மக்கள் அச்சம் தெரிவிப்பு

எமது ஆலயத்திற்கு கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக ஆயர்கள் வருகைதராமை, அருட்சகோதரிகளின் வழிநடத்தலில்லாமை, பக்திச்சபைகள் ஊக்குவிக்கப்படாமை, பிள்ளைகளுக்கு விசுவாசப்போதனை இல்லாமை போன்ற பல காரணங்களால் தம் மத்தியில் பிரிவினை சபைகள் ஊடுருவி தமது விசுவாசத்திற்கு சவாலாக இருப்பதாகத் தெரிவித்த கொக்குவில் புனித பவுல் ஆலய மக்கள்

(7ம் பக்கம் பார்க்க...)

### ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து ஏழைகளுக்கு உதவவேண்டும்
### சில்லாலை மக்களின் முன்னுதாரணம்

இன்று எம்மைச் சூழ வாழும் பல ஏழைமக்களின் ஏழ்மையைக் கவனிக்காமல் ஆலய செயற்பாடுகளில் அநாவசியமான ஆடம்பரங்களுக்குச் நிறைய பணம் செலவிடப்படுகிறது. இப்பணத்தைக் கொண்டு அவர்களின் வாழ்வை மேம்படுத்துவோனால் அது ஒரு முன்னுதாரணமான புதுப்பித்தலாக அமையுமென சில்லாலை பங்குக் கருத்தமர்வின்போது தெரிவிக்கப்பட்டது.

### பாவசங்கீர்த்தன அருட்சாதனத்தை மீண்டும் பயன்படுத்த முன்வாருங்கள்
### அளவெட்டி புனித சூசையப்பர் ஆலய மக்கள் வேண்டுகோள்

எமது புனிதமான வாழ்வுக்கு மிகவும் அவசியமான பாவசங்கீர்த்தன அருட் சாதனத்தை இன்று பலரும் கைவிட்டுவிட்ட அபாக்கிய நிலை தோன்றியுள்ளதாக அளவெட்டி புனித சூசையப்பர் ஆலய மக்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். மக்களும் குருக்களும் மீண்டும் இவ் அருட்சாதனத்தின் முக்கியத்துவத்தை உணர இம்

(7ம் பக்கம் பார்க்க...)

## காவலூர் தூய யாகப்பர் ஆலய முப்பெரும் விழா நிகழ்வுகள்



ஊர்காவற்றுறை தூய யாகப்பர் ஆலயத்தின் முப்பெரும்விழா நிகழ்வுகள் அனைத்தும் 25.07.2016 அன்று பங்குத்தந்தை அருட்பணி. பா.பி. இராசசிங்கம் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முப்பெரும் விழாவாக: மூன்று நூற்றாண்டுகளைக் கடந்த கத்தோலிக்க விசுவாச வாழ்வின் விழாவும் (1716 - 2016), இரண்டு நூற்றாண்டுகள் கத்தோலிக்கப் பாரம்பரியத்தைக் கொண்ட தற்போதைய ஆலயத்தின் அடிக்கல் நாட்டு விழாவும் (1815 - 2015), தூய யாகப்பர் விழாவும் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

அன்று காலை யாழ் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஊர்காவற்றுறைச் சந்தியில் பங்குத்தந்தை, குருக்கள், ஊர்ப்பெரியவர்களால் வரவேற்கப்பட்டார். அத்தருணத்தில் ஆயர் ஊர்காவற்றுறைச் சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட தூய யாகப்பர் திருச்சுரூபத்தை மூன்று நூற்றாண்டுகளைக் கடந்த கத்தோலிக்க விசுவாச வாழ்வின் யூபிலி நினைவு சின்னமாக ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார். பின்னர் ஆயர் அவர்கள்

(7ம் பக்கம் பார்க்க...)

## யாத்திரைத் தலங்களில் எல்லாரும் சமமாக மதிக்கப்படுவதில்லை

### பருத்தித்துறை பங்குமக்களின் அவதானிப்பு

எமது மறைமாவட்டத்தின் யாத்திரைத் தலங்களில் காணப்படும் சிலரது ஆதிக்கப்போக்குகள் களையப்பட்டு அங்கு நடைபெறும் திருநாட்களின்போது எல்லாருக்கும் சம உரிமை வழங்கப்படும் வகையில் நடைபெற இருக்கும் மேய்ப்புப்பணி மாநாட்டில் தீர்மானங்கள் எடுக்கப்படவேண்டுமென பருத்தித்துறையில் நடைபெற்ற கருத்தமர்வின்போது தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அன்பிய வாழ்வு ஊக்குவிக்கப்படவேண்டும் என்றும் கேட்கப்பட்டது.

## அருட்சகோதரர்களினால் முன்னெடுக்கப்படும் மேய்ப்புப்பணி மாநாட்டு விழிப்புணர்வு பங்குத் தரிசிப்பு

தமது குருத்துவக்கல்லூரி விடுமுறைக் காலப் பயிற்சியில் இருக்கும் யாழ் மறைமாவட்ட அருட்சகோதரர்கள் 24 பேர் மேய்ப்புப்பணி மாநாடுபற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பங்குத் தரிசிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இம்மாதம் 4ம் திகதி முதல் 28ம் திகதி வரை இவர்கள் ஆறு பேர் கொண்ட 4 குழுக்களாகப் பிரிந்து யாழ். மறைமாவட்டத்தில் எல்லாப் பங்குகளுக்கும் சென்று இல்லத் தரிசிப்பு, கருத்துப் பரிமாறல், துண்டுப்பிரசுர விநியோகம், பதாதை ஏற்றல், குழுக் கலந்துரையாடல்கள் போன்ற நிகழ்வுகளில் ஈடுபடுகிறார்கள்.

திருச்சபையின் வெளி விளிம்பில் இருப்போரை அணுகுவது இவர்களின்

(7ம் பக்கம் பார்க்க...)

# மறைமாவட்ட குருக்களின் 'லோக்கல்' குருத்துவம்

அருள்பணி. ம.வி.இ. இரவிச்சந்திரன்

## தொடக்கத் திருச்சபையில் திருப்பணிகள்.

தொடக்கத் திருச்சபையில் திருமுழுக்குப்பெற்ற அனைவருமே இறைமக்கள் என கருதப்பட்டனர். அவர்கள் 'கிளேறோஸ்' (Kleros) என அழைக்கப்பட்டனர். கிரேக்க மூலத்தின்படி இதற்கு 'தெரிவு செய்யப்பட்டவர்கள்' என பொருள் கொள்ளலாம். அன்று திருநிலையினர் (Kleros) பொதுநிலையினர் (Laicos) என்ற வேறுபாடு இருக்கவில்லை. அனைவரும் ஒரு குலமாக தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாக கருதப்பட்டனர். அவர்களிடம் சபையின் தேவைக்கென பல திருப்பணிகள் உருவாகிக் காணப்பட்டன. இறைவாக்குரைப்போர், தொண்டாற்றுவோர், கற்றுக்கொடுப்போர், ஊக்கமூட்டுவோர், தமக்குள்ளதை வழங்குவோர், தலைமை தாங்குவோர், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர், (உரோ. 3,6-8) பிணிதீர்க்கும் ஆற்றல் பெற்றோர், வல்ல செயல்செய்வோர், தேர்ந்து தெளிவோர், பரவசப் பேச்சு பேசுவோர், அதனை விளக்குவோர் (1கொரி. 12,4-11) என பலவகையான திருப்பணிகள் தொடக்கத் திருச்சபையில் ஆற்றப்பட்டன. ஆவியானவரின் கொடைக்கேற்ப அவரவர் தத்தம் திருப்பணிகளை ஆற்றி திருச்சபைக்கு வலுச்சேர்த்தனர்.

## தொடக்க திருச்சபையின் பின்னான வளர்ச்சி

தொடக்கத் திருச்சபையில் ஆற்றப்பட்ட பல்வேறு திருப்பணிகளில் முதன்மை பெற்றுக் காணப்பட்ட மேற்சொன்ன இருவகைத் திருப்பணிகளும் முன்னே வர ஏனைய திருப்பணிகள் இப்பணிநிலைகளோடு இணைந்து கொள்கின்றன. அல்லது வரலாற்றில் காணாமல் போகின்றன. இப்பணியில் ஈடுபடுவோரைத் தவிர்ந்த ஏனையோர் பொதுநிலையினராக (laicos) திருச்சபையில் பார்வையாளராக மாறுகின்றனர்.

கால ஓட்டத்தில் இறைவாக்கினர், திருத்தூதர், கற்பிப்போர் என்ற முதல்வகைத் திருப்பணிகளும் மறைந்து போகின்றன. ஆனால் அந்தத் திருப்பணிகளை துறவிகள் ஆற்றத்தொடங்குகின்றனர். பிற்காலத்தில் திருச்சபையின் திருத்தூதுப்பணியை ஆற்றும் பணியாளராக துறவிகள் மிளிர்கின்றனர். காலத்துக்குக் காலம் தோன்றிய பல துறவற சபைகள் காலத்துக்குத்தேவையான பல முன்னோடிப் பணிகளை ஆற்றப் புறப்படுகின்றனர். அந்த வகையில் தொடக்கத் திருச்சபையில் காணப்பட்ட இறைவாக்கினர், திருத்தூதர்கள் கற்பிப்போரின் இன்றைய வழித்தோன்றல்களாக துறவிகளே கருதப்பட வேண்டும். இவர்கள் தமது திருத்தூதுப் பணிக்கேற்ற வாழ்க்கை முறையையும் ஆன்மீகத்தையும் வளர்த்துக் கொண்டனர்.

இரண்டாவது வகைத்திருப்பணிகளாக தொடக்கத்திருச்சபையில் காணப்பட்ட மூப்பர்கள், கண்காணிப்பாளர்கள், திருத்தொண்டர்கள் குறிப்பிட்ட தளத்திருச்சபையை பராமரிக்கும் ஆயர்களாக, குருக்களாக, திருத்தொண்டர்களாக இன்று தொடர்ந்தும் பணியாற்றுகின்றனர். ஒரு மறைமாவட்டக் குருவினுடைய அழைப்பு இந்த இரண்டாவது வகையாகிய மேய்ப்புப்பணி சார்ந்த அழைப்பாகும். இந்த அழைப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் அதற்குரிய வாழ்க்கை முறையையும் ஆன்மீகத்தையும் கட்டியெழுப்ப வேண்டும். ஆகவே மறைமாவட்டக் குருத்துவத்தின் ஆன்மீகம் என்பது அது சார்ந்த தளத்திருச்சபையின் சூழ்நிலை சார்ந்ததாகும். மண்ணோடும் மக்களோடும் அவர்களது இன்பதுன்பங்களாடும் இறுகப் பிணைந்ததாகவே இருக்க வேண்டும்.

## மறைமாவட்ட குருத்துவம் ஒரு 'லோக்கல்' (Local Priesthood) குருத்துவம

அண்மையில் ஒரு மறைமாவட்டக் குருவினுடைய குருத்துவ நினைவு நாளில் நான் மறையுரையாற்ற நேர்ந்தபோது இந்தக்கருத்தை வலியுறுத்தினேன். உள்ளூர் எனப் பொருள்படும் Local என்ற ஆங்கிலச் சொல்லை எமது மக்கள் 'தரமற்றது' என்ற பொருள்பட பயன்படுத்துவது வழக்கம். அதுபோலவே மறைமாவட்டக் குருத்துவத்தையும் தரம் குறைந்ததாக கருதுவோர் உண்டு. ஆனால் Local என்ற சொல் அதன் உண்மையான அர்த்தத்தில் வெளிப்படுத்தும் உள்ளூர் என்ற பொருளில் மறைமாவட்டக் குருத்துவத்தை புரிந்து கொள்வது மிகவும் சரியானதே. 'Local Church' எனத்திருச்சபையின் ஆவணங்கள் குறிப்பிடும் விடயத்தை தமிழில் தலத்திருச்சபை என்கிறோம். அடிப்படையில் மறைமாவட்டக் குருத்துவம் என்பது தலத்திருச்சபையை (Local Church I) கட்டியெழுப்புவதையே பணிநோக்காக கொண்டது. ஆகவே தான் எவ்வளவு தூரம் லோக்கலாக இருக்க முடியுமோ அவ்வளவு தூரம் லோக்கலாக இருப்பது தான் (உள்ளூர் மொழியில் சொன்னால் படு லோக்கலாக) மறைமாவட்டக் குருத்துவத்துக்கான அழைப்பு. மண்ணோடும் மக்களோடும் அவர்களின் இன்பதுன்பங்களில் இரண்டறக் கலந்து அவர்களது கண்ணீரையும் வியர்வையையும் இரத்தத்தையும் தமது பலியில் கலந்து தம்மையே பலியாக ஒப்புக் கொடுப்பதுதான் மறைமாவட்ட குருத்துவத்தின் அழைப்பும் ஆன்மீகமும். இந்தக் கருத்தில் இக்குருத்துவத்தை உலகுசார் குருத்துவம் என்று சொல்வதும் (Secular Priests) பொருத்தமானதே. (துறவிகள் போல வாக்குறுதிகளை வழங்கி ஆன்மீகத்தை வாழாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உலக போக்கை அனுபவிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் என்ற கருத்து தவறானது) ஆகவே உலகுசார் நிலையும், உள்ளூர் நிலையும் அதனது உண்மையான அர்த்தத்தில் மறைமாவட்டக் குருத்துவதத்தின் சாரம் என்பதை ஒவ்வொரு மறைமாவட்டக் குருவும் மனம் கொள்ள வேண்டும்.

## புனித பவுலின் வழிகாட்டல்கள்.

சபையின் மூப்பர்களாக, கண்காணிப்பாளர்களாக நியமிக்கப்படுவோரின் மேய்ப்புப்பணிக்கடமைகள் பற்றியும் அவர்களிடம் காணப்படவேண்டிய பண்புகள் பற்றியும் பவுல் அடிகளார் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளார். மறைமாவட்டக் குருக்கள் தங்கள் ஆன்மீகத்தின் அடித்தளமாக பவுல் அடிகளாரின் மேய்ப்புப்பணி மடல்களை கொள்வது மிகவும் பொருத்தமானது. குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருத்தல், அறிவுத் தெளிவு, கட்டுப்பாடு, விருந்தோம்பல், கற்பிக்கும் ஆற்றல், கனிந்த உள்ளம், குடிவெறிக்கும் வன்முறைக்கும் இடங்கொடாமை, பொருளாசையை தவிர்ப்பது. திருச்சபைக்கு வெளியே இருப்பவர்களின் நற்சான்று, இழிச் சொல்லுக்கு ஆளாகாமை, கண்ணியம், இரட்டை நாவின்மை, தூய மனச்சான்று போன்ற பண்புகள் இவர்களிடம் காணப்பட வேண்டும் என்று திமேத்தேயுவுக்கு எழுதிய முதல் மடலிலே பவுல் குறிப்பிடுகிறார். அதே மடலில் அவர்களின் பணிபற்றி பேசும்போது முதியோரிடம் கடுமையாய் இராதே அவர்களை தந்தையாய் மதித்து ஊக்குவி, இளைஞர்களை தம்பிகளாகவும் வயது முதிர்ந்த பெண்களை அன்னையராகவும் இளம் பெண்களை தூய்மை நிறைந்த மனத்தோடு தங்கையராகவும் கருதி அறிவுரை கூறு, மறைநூலை படித்துக் காட்டி அறிவுரை வழங்கு, கைம்பெண்களுக்கு மதிப்பு கொடு, முன்கூட்டியே முடிவெடுக்காதே, நடுநிலை தவறாதே, பாவங்களில் பங்கு கொள்ளாதே போன்ற கருத்துக்களை வழங்குகிறார்.

இன்னும் அவர்கள் தங்களுடைய தனிப்பட்ட ஆன்மீக வாழ்வைப் பொறுத்தவரை நீதி, இறைபற்று, நம்பிக்கை, மன உறுதி, பணிவு ஆகியவற்றை நாடித் தேடுமாறும் விவாதங்களிலும் சொற்போர்களிலும் ஈடுபடவேண்டாம் என்றும் செல்வம் சேர்க்க முனையாமல் உடையோடும் உணவோடும் மனநிறைவு கொள்ளுமாறும் பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை ஆகியவற்றில் முன்மாதிரியாக விளங்குமாறும் இயேசுவின் நல்ல தொண்டனாக இருக்குமாறும் அறிவுரை கூறுகிறார்.

மேற்சொன்னவை இம்மடல்களில் மேய்ப்புப் பணிகளில் அமர்த்தப்பட்ட கண்காணிப்பாளர்களுக்கு தூய பவுல் வழங்கும் அறிவுரைகளின் உதாரணமாகும். இன்னும் பல விடயங்களை இம் மேய்ப்புப்பணி மடல்களை ஆழமாக வாசித்து நாம் புரிந்து கொள்ளலாம். புனித பவுலின் கருத்துக்களை தொகுத்து நோக்கும்போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை அன்புசெய்து, அறிவூட்டி, நெறிப்படுத்தி வழி நடத்தும், அவர்களை ஒரு இறைமக்கள் சமூகமாக கட்டியெழுப்பும் பணியை நிறைவேற்றப் பணிக்கிறார் என்பது புலனாகிறது. ஆகவே குழுமத்தைக் கட்டியெழுப்பும் ஒரு பணிச்சூழலில்தான் ஒரு மறைமாவட்டக் குருவின் வாழ்வும் ஆன்மீகமும் கருக்கொள்கிறது.

## இயேசு வழங்கும் மாதிரி

சாவகச்சேரிப் பங்கில் பங்குத் தந்தையாக இருந்தபோது குருவுக்கான பணிமனை ஒன்றை அமைக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிட்டியது. அமைத்த பின்பு அதன் முகப்பில் ஒரு படம் வைக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அதற்கான படத்தை தெரிவு செய்த போது நான் ஒரு அழகிய நல்லாயன் படத்தைத் தெரிவு செய்தேன். ஏனெனில் ஒரு பங்குக் குரு பின்பற்ற வேண்டிய மாதிரி (model) நல்லாயனே என்பது எனது கருத்தாக இருந்தது.

யோவான் நற்செய்தியின் 10ம் அதிகாரத்திலே "நானே நல்ல ஆயன்" என்று குறிப்பிடும் இயேசு நல்லாயனின் சிறப்பியல்புகளை விபரிக்கிறார். நல்லாயன் தன் ஆடுகளை அறிவான், ஆடுகளும் அவனது குரலை அடையாளம் காணும். அவன் அவற்றை மேய்ச்சல் நிலங்களுக்கும் நீரோடைகளுக்கும் அழைத்துச் செல்வான். அவற்றை கட்டுப்போட்டு பராமரிப்பான். ஆபத்து வேளையில் ஓடிவிடமாட்டான். அவற்றிற்காக தன் உயிரையும் கொடுப்பான்., தொலைந்து போன ஓர் ஆட்டையும் தேடிச் செல்வான் அவற்றை ஒன்றாகக் கூட்டிச் சேர்ப்பான். அன்போடு அவற்றை அரவணைத்து வழிநடத்துவான். இத்தகைய ஒரு நல்ல ஆயனே உண்மையான மேய்ப்பன் அவன் ஆற்றுவதே சரியான மேய்ப்புப்பணி.

மேய்ப்புப் பணித்திருப்பணியில் அமர்த்தப்பட்டு தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட தலத்திருச்சபையை (Local church) வழிநடத்தும் பொறுப்பை ஏற்கும் மறைமாவட்டக் குருத்துவத்தில் உள்ள ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்களும் நல்லாயனை தமது மாதிரியாகக் கொள்ள வேண்டும். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை நன்கு அறிந்து அவர்களை பராமரித்து கூட்டிச் சேர்த்து, அவர்களின் துயர் துடைத்து, தேவையேற்படும் போது அவர்களுக்காக உயிரையும் கொடுத்து வாழ்வதே இந்த மறைமாவட்ட குருத்துவ அழைப்பு.

## விடுதலை வேள்வியில்...

எமது மண்ணில் நிகழும் விடுதலை வேள்வியில் தமது மேய்ப்புப்பணி ஈடுபாட்டின் விளைவாக தம்மையே ஆகுதியாக்கிய அருள்பணியாளர்கள் பலர்மறைமாவட்டக்குருக்களே.

கொல்லப்பட்டவர்களை தேடிப்புதைத்து அநீதியை எதிர்த்து நீதி கோரியதனாலே சுடப்பட்டு இறந்த மேரி பஸ்ரியன், இடம் பெயர்ந்த மக்களோடு இடம்பெயர்ந்து அவர்களின் முகாம் வாழ்க்கைச்சூழலைப் பகிர்ந்து அவர்களோடு நோய்த் தொற்றுக்கு ஆளாகி மருத்துவ வசதியின்றி மரணித்த ஜோண் லொறட், மனித உரிமைப் பணிகளில் ஈடுபட்டு கிளைமோர் தாக்குதலிற்கு இலக்கான கருணாரட்ணம், மனிதநேயப் பணிக்காக சென்ற வேளை கிளைமோருக்கு பலியான பாக்கியரஞ்சித் மக்களோடு நின்று அவர்களது விடுதலைக்காக மன்றாடியதாலே காணாமல் போகச் செய்யப்பட்ட ஜிம்புறவுண், இறுதிப் போரின் இறுதிநாள்வரை மக்களோடு

(7ம் பக்கம் பார்க்க...)

# இலங்கை கரித்தாஸ் இயக்குனருக்கு பிரியாவிடை





இலங்கை கரித்தாஸ் - செடேக் தேசிய நிலையத்தின் இயக்குனராக 8 வருடங்கள் பணியாற்றிய அருட்பணி ஜோர்ச் சிகாமணி அடிகள் பணி நிறைவு செய்வதை முன்னிட்டு பிரியாவிடை நிகழ்வு யாழ் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தினரால் 17.06.2016 இல் நடாத்தப்பட்டது.

இவ்விழா யாழ் கியூடெக் கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் தலைமையில் கியூடெக் பணியாளர்களுடன் ஏனைய மறைமாவட்ட இயக்குனர்களும் புதிய இலங்கை கரித்தாஸ் நிலைய இயக்குனர் அருட்பணி சாந்திக்குமார் வெலிவிற்ற அடிகளாரும் தேசிய நிலைய உத்தியோகத்தர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

தேசிய இயக்குனராகப் பணியாற்றி பிரியாவிடை பெறும் ஜோர்ச் சிகாமணி அடிகளாருடன் சிறப்புவிருந்தினர்களும் மத்தியூஸ் வீதியில் இருந்து மங்களநாதஸ்வர வாத்தியம் இசைக்கப் பவனியாக அழைத்துவரப்பட்டு நன்றிப் பலியுடன் பிரியாவிடை நிகழ்வு இடம் பெற்றது.

கௌரவ விருந்தினர் யாழ் ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையுடன் சர்வமதத் தலைவர்களும் பிரியாவிடை நாயகரை வாழ்த்தி பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசில்களும் வழங்கிக் கௌரவித்து சிறப்பித்தனர்.

# கியூடெக் இயக்குனர் உரை





இளைஞர் மட்டில் அக்கறை எடுத்து அவர்களுக்கு எப்படி வழிகாட்டலாம் நல்வழிப்படுத்தலாம் என்ற சிந்தனைதான் இன்று மிகமிகத் தேவை, அதுவே எங்களின் கடமை. இவ்வாறு தெரிவித்தார் கியூடெக் கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகள்.

பல்சமயக் கருத்தாடல் நிலையம் மற்றும் யாழ் ராகஸ்வரம் இசைமன்றத்தின் அனுசரணையில் ஒளிப்படங்களின் காட்சிப்படுத்தலும் கருத்தாடல் நிகழ்வும் 19.07.2016 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் இந்த நிகழ்வின் இணைப்பாளரும் யாழ் ராகஸ்வரம் இசைமன்றத் தலைவருமான புகைப்படக் கலைஞர் ஜோ.ஜெஸ்ரின் தலைமை யில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்...

இந்த புகைப்படங்களை பார்க்கின்றபோது இவை புகைப்படங்களா? இல்லை ஓவியங்களா? என்று எண்ணத் தோன்றுகின்றது. இந்த புகைப் படங்களில் முக்கியமாகத் தெரிவது தங்கள் தங்கள் பணிகளை ஆர்வத்துடன் செய்திருக்கின்றார்கள். எதையும் ஆர்வத்துடன் செய்ய வேண்டும் என்பது இலக்கற்றுத்திரியும் இளையோர்களுக்கு ஒரு விழிப்புணர்வாகும்.

தொழில்களில் ஏற்றத்தாழ்வுகள் இல்லாது ஆர்வத்துடன் செய்யவேண்டும். ஆலயங்களுக்குப் போனால் இளைஞர்கள் வெளியில்தான் நிற்பார்கள். இந்தப் படங்களில் முதியவர்கள் பக்தியாக கும்பிடுகின்றார்கள். ஆலயத்தில் கடவுள் இருக்கின்றார் என்ற மதிப்பு மரியாதையை காத்துக் கொள்ள இளைஞர்கள் நம்பிக்கையுடன் முன்வர வேண்டும். நல்லிணக்கம் பற்றிப் பேசுகின்றோம், அதைவிட இளைஞர்கள் மட்டில் அக்கறை எடுத்து அவர்களுக்கு எப்படி வழிகாட்டலாம், நல்வழிப்படுத்தலாம் என்ற சிந்தனைகள்தான் இன்று மிக மிகத்தேவை. இதுவே எங்களின் கடமை என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன் என்றார்.

இந் நிகழ்வில் யாழ் சமூக செயற்பாட்டு மைய இணைப்பாளர் என், சுகிர்தறாஜ், யாழ் மாநகரசபை சுகாதாரவைத்திய அதிகாரி பி. யசிதரன், திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குனர் யோ. யோண்சன் ராஜ்குமார் ஆகியோரும் சிறப்புரைகள் ஆற்றினர்.

# தூய யோசவ்வாஸ் தமிழ் இறையியல் கல்லூரியின் கிறிஸ்தவ கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு





உலகியலுக்குள் இருந்து கொண்டு நற்செய்தி அறிவிப்புப்பணியை மேற்கொள்வது கடினமானது. அதனை வெற்றிகொள்ள தலத்திருச்சபை அடிமட்டத்திலிருந்து உருவாக்கப்படவேண்டும் என்ற முக்கிய நோக்கின் ஆரம்பப்படியாக இந்த பொதுநிலையினருக்கான இறையியல் டிப்ளோமா கற்கைநெறி விளங்குகின்றது.

தூய யோசவ்வாஸ் தமிழ் இறையியல் கல்லூரியின் கிறிஸ்தவ கற்கைநெறி சான்றிதழ் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் வழங்கும் நிகழ்வு கடந்த 22.06.2016 இல் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கொழும்பு தூய யோசவ்வாஸ் இறையியல் கல்லூரி அதிபர் அருட்திரு தயாசெல்ரன் வெல்கட ஆராய்ச்சி அடிகள் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி இயக்குனர் அருட்பணி ம. வி. இ. இரவிச்சந்திரன் அடிகளின் வழிகாட்டலில் நடைபெற்ற நிகழ்வில் யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கற்கைநெறியைப் பூர்த்தி செய்து வெளியேறும் முதல்தொகுதி 14 மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இலங்கையில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பொதுநிலையினருக்கான இறையியல் பயிற்சி நெறி தற்போது மறைமாவட்டங்களில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

அருட்பணி தயாசெலின்ரன் அடிகள் தொடர்ந்து உரையாற்றும்போது யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் உருவாக்கத்தில் மிக முக்கியமான பணி இதுவாகும். துறவிகளும் பொதுநிலையினரும் ஆழமான முறையில் தமதுபணியை முன்னெடுக்க இக் கற்கைநெறி உதவும் என்றார்.

**தகவல்: எஸ். யேசுதாஸ்.**

# ஓய்வு நிலை ஆயருக்காக நன்றியோடு செபிப்போம்



"ஆண்டவர் தாம் திருப்பொழிவு செய்தவருக்கு வெற்றி தருகிறார். தமது தூய வானத்திலிருந்து அவருக்கு பதில் அளிக்கிறார். வெற்றியளிக்கும் தமது வலக்கையின் ஆற்றலைக் காட்டுகிறார்." (தி.பா. 20:6)

ஒவ்வொரு மனிதனின் வாழ்வின் நிறைவுக்கும் வெற்றிக்கும் பின்னால் பலருடைய ஒத்துழைப்பும், வழிகாட்டலும் இருந்தாலும் துறவற வாழ்விலும் இறையாட்சிப் பணியிலும் ஆயராகவும் குருவாகவும் 53 வருடங்கள் காத்திரமான காலத்தை நிறைவு செய்வது என்பது இறைவனின் உடனிருப்போடு கூடிய அருட்பொழிவும் கொடை யுமாகும். மன்னார் மறைமாவட்டத்தையும் யாழ் மறைமாவட்டத்தையும் மொத்தமாக 34 ஆண்டுகள் தன்னுடைய உன்னதமான அர்ப்பணிப்பு நிறைந்த துணிச்சலோடு கூடிய ஆயத்துவ பணிகளினூடாக சிறப்பாக வழி நடத்திய ஓய்வு நிலை ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்ட கையை வாழ்த்தி இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

(8ம் பக். பார்...)

# யாழ்.மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடு – 2016

## - சிறப்புக் கட்டுரை -

பகுதி - II

பாகம் 10

# புதுப்பித்தலுக்கு ஓர் அழைப்பு

## ஓர் உளவள ஆன்மீகப் பார்வை

**முன் கட்டுரைத் தொடர்ச்சி...**

**கி**றிஸ்துவின் உயிர்ப்பை ஒட்டி வாழ்ந்த மக்கள் தங்களை "வழியின் மக்கள்" (People of the way) என்றழைத்து, இயேசுவின் கனவை நனவாக்க முயன்றார்கள். திருத்தூதர் பணிகள் இதை எடுத்துக் கூறுகின்றது. அவ்வாறெனில்,

**யாகப்பரின் அக்கறை என்ன?**

அவரே சொல்லட்டும்: "என் சகோதர சகோதரிகளே, தம்மிடம் நம்பிக்கை யுண்டு எனச் சொல்லும் ஒருவர் அதைச் செயல்களிலே காட்டாவிட்டால், அதனால் பயன் என்ன? அந்த நம்பிக்கை அவரை மீட்க முடியுமா? என்று பொருளோடு கேள்வி எழுப்பிய யாகப்பர் ஓர் உதாரணம் தந்து தனது கேள்வியை மேலும் விளக்குகிறார். "ஒரு சகோதரன் அல்லது ஒரு சகோதரி போதிய உடையும் அன்றாட உணவும் இல்லாதிருக்கும் போது, அவர்கள் உடலுக்குத் தேவை யானவை எவற்றையும் கொடாமல் உங்களுள் ஒருவர் அவர்களைப் பார்த்து, நலமே சென்று வாருங்கள்: குளிர்காய்ந்து கொள்ளுங்கள்: பசியாற்றிக் கொள்ளுங்கள்: என்பாரென்றால் அதனால் பயன் என்ன? அதைப் போலவே, நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதா யிருக்கும்" (யாக. 2:14-17)

யாகப்பர் என்ன சொல்ல முனைகிறார்? ஒருவருடைய நம்பிக்கையும் அவரது நடத்தையும் முரண் பட்டிருந்தால், அவரது நம்பிக்கையில் பயனில்லை, அவர் அகவிடுதலை பெறமாட்டார். இந்த முரண்பாட்டையே நான் இரட்டை வாதமென்கிறேன். இதையே ஓர் அகப்பிளவு என்கின்றேன்.

ஒருகாலத்தில் இந்த யாகப்பரின் வார்த்தைகளை வைத்து இறையியலில் ஒருபெரிய வாதம் ஏற்பட்டது. அதாவது, மீட்பிற்கு நம்பிக்கை தேவையில்லை என்று ஒரு சாராரும், செயல் போதும் நம்பிக்கை தேவையில்லை என்று இன்னொரு சாராரும், மோதிக் கொண்டார்கள். மோதினோரின் ஆன்மீகம் எவ்வழி சென்றது. என்பது வேறோர் கேள்வி. இப்படிப்பட்ட இறை இயலாளர் ஆன்மீகம் பேசுவது குறைவு! மேலும் அப்பொழுது இறை இயலில் இரட்டைவாதப் பேச்சு இருக்கவில்லை.

**விரிசல்**

யாகப்பருடைய திருமுகத்தைப் படிக்கும் பொழுது ஓர் உண்மை புலனாகின்றது. அதாவது, கிறிஸ்த்துவின் உயிர்ப்பை ஒட்டி வாழ்ந்த வழியின் மக்களுக்கும் யாகப்பர் திருமுகம் எழுதிய காலத்து (50.60 ஆண்டுகளுக்குப் பின்னர்) கிறிஸ்த்தவர்களுக்குமிடையே ஒருவிரிசல் தோன்றிவிட்டது. அப்போஸ்தலர் காலத்துக் கிறிஸ்தவர்களிடையே இரட்டைவாதம் குடியேறிவிட்டது. ஏனைய திருமுகங்களிலும் இது கண்கூடு.

அன்று ஆரம்பித்த விரிசல் - இரட்டைவாதம் படிப்படியாக வளர்ந்து, கிறிஸ்தவம் ஒரு கட்டுக்கோப்பான இறுகிய அமைப்பாக மாறியதுடன் கிறிஸ்தவத்துடன் இரண்டறக் கலந்துவிட்டது. இந்த இரட்டைவாதம் இறையியலிலும் தோன்றியது. இந்த இரட்டை வாதத்தின் அடி கிரேக்க தத்துவம். இதையிட்டு மேற்கொண்டு எழுத இங்கு இடமில்லை. மன்னிக்கவும்.

**நம்பிக்கை என்ன? செயல் என்ன?**

நம்பிக்கையை (விசுவாசம் - Faith) இருவகையாகப் பார்க்கலாம். ஒன்று, மதத்தின் கோட்பாடுகளை. படிப்பினைகளை ஏற்றுக்கொள்வது. நம்பிக்கை அமைப்பை (Belief system) ஏற்றுக்கொள்வது. கத்தோலிக்க மக்கள் ஞாயிறு தோறும் - (சில பெரும் விழாக்களின் போதும்) மறை உரையின் பின்னர் விசுவாச அறிக்கையை எடுத்துரைக்கிறார்கள். இது, நம்பிக்கை அமைப்பை ஏற்றுக் கொள்வது. இது, ஒரு செபமல்ல, ஓர் அறிக்கை. திருமுழுக்கின் பொழுதும் இந்த அறிக்கை கேள்வி - பதிலாக சொல்லப்படுகின்றது.

**கரவையூர்ச் செல்வம்**

இரண்டாவது, நம்பிக்கையை (விசுவாசம் - Faith) ஓர் உறவாகவும் பார்க்கலாம். Faith as relationship. முதலாவதில், அதாவது விசுவாச அறிக்கையை ஆழமாக்கவோ வளர்க்கவோ ஒன்றுமில்லை. அவை பெரும்பாலும் பிரித்தெடுக்கப்பட்ட புலனாகாத கோட்பாடுகள் (abstract constructions). உணர்வுகளில் இருந்து அறிவைப் பிரித்தெடுத்து இறை இயலாளரால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகள். இயேசு, இவற்றைப்பற்றிக் கவலைப்பட்டவர் அல்ல. இவையும்மூட்டை முடிச்சுகள்தான்.

இரண்டாவது, விசுவாசத்தை (Faith) ஓர் உறவாகப் பார்க்கும்பொழுது, அந்த உறவு வளரலாம், வளர வேண்டும். ஆழமாகலாம், ஆழமாக்கப்பட வேண்டும். 'உனது விசுவாசத்தை ஆழமாக்கு' என்பதன் அர்த்தம், இதுவே.

**நம்பிக்கை, ஒரு பயணம்.**

நம்பிக்கை / விசுவாசம் ஒரு பயணம் (Faith is a journey) ஒருவரின் வாழ்நாள் பயணம். இது, ஓர் உறவுப் பயணம். நான் என்னுடன், அயலவருடன், சூழலுடன், ஆகவே கடவுளுடன் உறவை வளர்க்கும், உறவை ஆழமாக்கும் ஓர் ஆன்மீகப் பயணம்.

எனக்கு 'நம்பிக்கை உண்டு' என்று கூறுவதற்கும், 'நான் நம்புபவன்' (அதாவது, நான் உறவுள்ளவன் என்ற அர்த்தத்தில்) என்றழைப்பதற்கும் வேறுபாடுண்டல்லவா? 'எனக்கு நம்பிக்கை உண்டு' என்று சொல்லும் பொழுது, நான் இந்த மதக் கோட்பாடுகளையும், மறைப்படிப்பினைகளையும் (A Belief system) ஏற்றுக் கொள்பவன் என்று பொருள்படும். ஆனால், கோட்பாட்டையும் படிப்பினையையும் ஏற்றுக் கொள்வதற்கும் எனது அன்றாட வாழ்விற்கும் இடையே ஒரு விரிசல் ஏற்படுமாயின் அதையே இரட்டைவாதம் என்கிறோம். இதையே அகப்பிளவு என்றும் கூறுகின்றோம்.

**அடுத்த இதழில் முற்றும்.**

---

## பாஷையூர் புனித அந்தோனியார் விழா

**ஏ**ழைகள், துன்புறுவோர், ஆறுதலற்றோர் வாழ்வாதார தேவைகளுக்காகக் காத்திருப்போர், அன்புக்காக ஏங்குவோரைத் நாமாகத் தேடிச் சென்று இரக்கத்தையும், அன்பையும் வெளிப்படுத்தி உதவுவதே இரக்கத்தின் ஆண்டின் பிரதான செயற்பாடாகும். இதனையே புனித அந்தோனியாரும் தமது வாழ்வில் கடைப்பிடித்தார்.

பாஷையூர் புனித அந்தோனியார் பெருவிழா கடந்த 13ஆம் திகதி நடைபெற்றபோது திருவிழாத் திருப்பலியை நிறைவேற்றி மறையுரையாற்றிய யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தமது மறையுரையில் அந்தோனியாரிடம் விளங்கிய பிரதான பண்புகளான நற்கருணை மீதான பற்று, இறைவார்த்தைப்பற்று இறை சித்தத்தை நிறைவேற்றுதல், ஏழைகள் மீதான இரக்கம் என்பவையே அவருக்கு மகிமையையும் கோடி அற்புத வல்லமையையும் இறைவன் வழங்க காரணமானது. யேசுவின் மனுவுரு தந்தையின் இரக்கத்தின் பிரதி பலிப்பாகும்.

எமக்கு இறைவன் தந்த கொடைகளும் வாழ்வு முறைகளும் சிலவேளைகளில் தடைப்படுவது வேறொரு சிறந்த கொடையை, பணியை வழங்கும் இறைவனின் திட்டமாக இருக்கலாம். இறைசித்தத்தை ஏற்றுவாழ்வது சுலபமான காரியமல்ல, அதற்கு மனப் பக்குவமும் இறைநம்பிக்கையும் அவசியம் என்றார்.

நற்கருணைப் பெருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் ஒப்புக்கொடுத்தார்.

திருவிழாவில் வடமாகாணசபை முதலமைச்சர் க.தி. விக்னேஸ்வரன், அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் மாகாணசபை உறுப்பினர்கள், யாழ் பிரதேச செயலர் ஆகியோரும் பல்லாயிரக் கணக்கான பக்தர்களும் பங்குபற்றினர்.

– தகவல் : எஸ்.யேசுதாஸ் –

# யாழ்ப்பாண மறைமாவட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை
## பின்னணி, தோற்றம், வளர்ச்சி

முன்னைய தொடர்ச்சி...

அருட்பணி
S.V.B.மங்களராஜா

## ஒரு ஐரோப்பிய அப்போஸ்தலிக்க முதல்வரைத் தேடும் முயற்சி – ஓராசியோ பெற்றக்கீனியின் தெரிவு

மறைப்பணியை பொறுத்தளவில் கடும் உழைப்பாளியாக இருந்த பெற்றக்கீனி அடிகளாரின் வாழ்வும், பணியும் புதிய சூழ்நிலைகளுக்கும், மாறிய களநிலைகளுக்கும் முகம் கொடுக்க முடியாது, பழைய, தற்போதைய நிலைக்கு பொருத்தமற்ற பணிவடிவங்களுக்கு பழக்கப்பட்டுப் போன, தேக்கநிலையை அடைந்த கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களின் பணிநிலைகளுக்கு ஒரு பெரும் சவாலாகவே விளங்கின எனலாம். இப்பின்னணியில் பெற்றக்கீனி அடிகள் ஒரு இக்கட்டான நிலையிலேயிருந்தார். கணிசமானளவு இலங்கைக் கத்தோலிக்கர் பெற்றக்கீனி அடிகளார் வாரிசு ஆயராகவும் அப்போஸ்தலிக்க முதல்வராகிய ஆயர் கெய்தானோ அந்தோனியோவுக்கு துணை ஆயராகவும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினர்.

மறுபக்கத்தில் கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்கள் இவரின் நியமனத்தை வன்மையாக எதிர்த்த வண்ணமேயிருந்தனர். அத்துடன் கொழும்பில் கத்தோலிக்க திருச்சபைக்குள் ஒரு பிரிவினை ஏற்படுவதற்கான களநிலை உருவாகிக் கொண்டிருந்தது. விசுவாசப்பரப்புதல் சபையின் கூடுதல் ஐரோப்பிய குருக்களை இலங்கைக்குள் கொண்டு வரும் திட்டத்தை எதிர்த்தவண்ணமிருந்த கோவா மறைமாவட்டப் பேராயரும், கொச்சின் மறைமாவட்டப் பரிபாலகரும் இலங்கையில் திருச்சபை பிரிவினைக்குத் தூபமிட்டுக்கொண்டிருந்தனர். பிரிவினையைத் தூண்டுவதற்கெனச் சில குருக்களை முதலாக கோவாப் பேராயர் அனுப்பியிருந்தார். மேற்படி பிரிவினைக்கு வெகு சில கத்தோலிக்கரே பக்கபலமாக இருந்தாலும் இப்பிரிவினை இலங்கையில் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒரு இடைஞ்சலாகவே இருந்தது. எனவே இக்காலகட்டம் இலங்கைக் கத்தோலிக்க திருச்சபைக்கு மிக்க சவால் நிறைந்த காலமாகவே இருந்தது. இச்சிக்கலில் இருந்து விடுபடுவதற்கு இலங்கையின் அப்போஸ்தலிக்க முதல்வர், ஆயர் கெய்தானோ அந்தோனியோ மிகத் துணிச்சலான முடிவை எடுத்தார். கோவா ஒரட்டோரியன் சபைக்குருக்களின் எதிர்ப்பின் மத்தியிலும் பெற்றக்கீனி அடிகளாரை கெய்தானோ அந்தோனியோவின் வாரிசு அப்போஸ்தலிக்க முதல்வராக ஏற்படுத்தப்பட்ட நியமனக்கடிதத்தை பகிரங்கப்படுத்தினார். ஒக்ரோபர் மாதம் 5ம் திகதி 1845ம் ஆண்டு கொழும்பு, கொட்டாஞ்சேனை புனித லூசியாள் தேவாலயத்தில் இந் நியமனக்கடிதம் பகிரங்கமாக வாசிக்கப்பட்டது. தொடர்ந்து பெப்ரவரி மாதம் 11ம் திகதி 1846ம் ஆண்டு ஆயர் கெய்தானோ அந்தோனியோ ஆண்டகை பெற்றக்கீனி அடிகளைப் புனித லூசியாள் ஆலயத்தில் ஆயராகத் திருநிலைப்படுத்தினார். இதுதான் இலங்கையில் இடம் பெற்ற முதலாவது ஆயர் திருநிலைப்படுத்துதல் சடங்காகும்.

### ஆயர் ஓராசியோ பெற்றக்கீனி வடபகுதியின் (யாழ்ப்பாண முதல் அப்போஸ்தலிக்க முதல்வர்– ஆயர்)

இதற்கிடையில் மறைப்பணியை இலகுவாக்கும் வகையில் மே மாதம் 6ம்திகதி 1845ம் ஆண்டு இலங்கை தெற்கு, வடக்கு (கொழும்பு, யாழ்ப்பாணம்) என இரு அப்போஸ்தலிக்க நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பாப்பரசர் 16ம் கிரகோரியார் (பாப்பரசராக 1831-1846) அவர்களால் பெற்றக்கீனி ஆண்டகைக்கு அனுப்பப்பட்ட நியமனக்கடிதத்தில் அப்போஸ்தலிக்க முதல்வர் கெய்தானோ அந்தோனியோவிற்கு வாரிசு ஆயராக இருக்கும் அதே வேளையில் அவர் வட பகுதியின் (யாழ்ப்பாணப்பகுதி) பராமரிப்பு மட்டில் விசேட கவனம் செலுத்தவும் வேண்டுமென்று குறிப்பிடப பட்டிருந்தது. ஆயர் பெற்றக்கீனிக்கு பல சவால்களும், உரோமை விசுவாசப்பரப்புதல் சபையின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப நிறைவேற்ற வேண்டியமுக்கிய பணிகளும் காத்திருந்தன.

ஒரட்டோரியன் சபைக்குருக்கள் சாதீயத்தின் அடிப்படையிலேயே குருத்துவ அழைத்தலுக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். தங்களுக்கு வேண்டிய அழைத்தல்களை கோவாவில் உயர் சாதியினராகக் கருதப்பட்ட பார்ப்பனர் சாதியினரிடையேயிருந்து மட்டுமே தேர்ந்தெடுத்தனர். அவர்கள் இலங்கையில் பணியாற்றிய காலத்தில் தமிழ் மக்களிடையேயிருந்தோ, சிங்கள மக்கள் மத்தியில் இருந்தோ தேவ அழைத்தல்களை ஊக்குவிக்கவுமில்லை, அவர்களுளிருந்து ஒருவரையும் தேர்ந்தெடுக்கவுமில்லை. இதனால்தான் கோவாவிலிருந்து குருக்கள் வருவது நின்று போனதும் இலங்கைத் திருச்சபை பெரும் குருக்கள் பற்றாக்குறையை எதிர்கொண்டது. கோவாவிலிருந்து 1834ம் ஆண்டு வந்த குருக்கள் குழுவிற்குப் பின் குருக்கள் வருகை நின்று போனது. கோவா மாகாணத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த போர்த்துக்கல் அரசு 1835ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ம் திகதி தமது பிரதேசத்தில் உள்ள துறவற சபைகளையெல்லாம் கலைத்து விட்டது. இதனால் இலங்கையில் கடந்த 150 வருடமாக கத்தோலிக்க திருமறையை அழியவிடாது காத்துவந்த கோவா ஒரட்டோரியன் சபையினரது இருப்பும் கேள்விக்குறியானது. புதிதாகக் குருக்கள் வரமுடியாத நிலையில் ஏற்கெனவே இருந்த குருக்கள் இன்னும் கூடுதல் வேலைப்பழுவை ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டதுடன், இவர்கள் வயது முதிர்ந்து இறந்தபின் இறைமக்களின் ஆன்மீக நலன்களைக் கவனிப்பது யார் என்ற கேள்வியும் எழுந்தது.

இந்தப்பின்னணியில்தான் உரோமை விசுவாசப் பரப்புதல் சபை இலங்கை அப்போஸ்தலிக்க முதல்வர் ஆயர் கெய்த்தானோ அந்தோனியோவுக்கு மே மாதம் 12ம் திகதி 1845ம் ஆண்டு எழுதிய மடலில் இலங்கையில் சுதேச குருக்களை உருவாக்குவதற்கு ஒரு குருமடத்தைக் கட்டியெழுப்பவும் இலங்கையிலிருந்தும் ஒரட்டோரியன் சபைக்கு அழைத்தல்களைப்பெறவும் வேண்டுமெனப்பரிந்துரைத்தது. அத்துடன் இவரது வாரிசு ஆயராக நியமிக்கப்பட்ட பெற்றக்கீனி அடிளாரைப்பொறுத்தமட்டில் அவர் தனிக்கவனம் செலுத்த வேண்டிய யாழ்ப்பாணத்தில் சுதேச குருக்களை உருவாக்கவென ஒரு குருமடத்தைக்கட்டியெழுப்ப அவரைத்தூண்ட வேண்டுமென்றும் சுதேச குருக்கள் உருவானால்தான் அதன்வழியாக இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையில் ஒரு தொடர்ச்சியும், வளர்ச்சியும் உறுதி செய்யப்படுமென்றும் குறிப்பிட்டது.

இலங்கைக்கத்தோலிக்க திருச்சபையின் இரு அப்போஸ்தலிக்க மாவட்டங்களிலும் (Apostolic Vicariates) குறிப்பாக புதிதாக உருவாக்கப்பட்ட வடக்கு அப்போஸ்தலிக்க மாவட்டத்தில் வினைத்திறனுடன் மறைப்பணி முன்னெடுக்கப்படுவதற்கென பாப்பரசர் 11ம் பத்திநாதர் (பாப்பரசராக 1846-1878) 1846ம் ஆண்டு டிசம்பர் 17ம் திகதி ஆயர் பெற்றக்கீனி ஆண்டகை தென்பகுதி அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் ஆயர் கேய்த்தானோ அந்தோனியோவின் வாரிசு ஆயராகத் தொடரும் அதேவேளையில் வடக்கு (யாழ்ப்பாண) அப்போஸ்தலிக்க மாவட்டத்தின் பதில் ஆயராக நியமித்தார். இவரது நிர்வாகத்தின் கீழ் வடமாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் வடமேல், வட மத்திய மாகாணங்கள் (தும்மன்கடுவ மாவட்டம் நீங்கலாக) உள்ள இடங்கள் 13,542 சதுர மைல்களைக் கொண்ட பகுதிகள் உள்ளடங்கியிருந்தன இது நாட்டின் நிலப்பரப்பில் பாதிக்குச்சற்றதிகமாகும்.

(தொடரும்...)

## குருநகர் சமூக அபிவிருத்திக்கான பேர்கன் ஒஸ்லோ இணையம் நடாத்திய பயிற்சிப்பட்டறை

யா / சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் கடந்த 14.05.2016 அன்று மேற்படி இணையத் தலைவர் திரு.கி. சிலுவைதாஸ் தலைமையில், தரம் 3,4,5 மாணவர்களின் கல்வித்தரத்தினை மேம்படுத்துதலை நோக்காகக் கொண்டு பெற்றோர், மாணவர், ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை இடம்பெற்றது.

இதில் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி J.J. மௌலிஸ்மற்றும்யா/ சென்ஜேம்ஸ்மகளிர் பாடசாலை அதிபர் திரு A. மரியதாசன், யா/ சென் ஜேம்ஸ் மகாவித்தியாலய அதிபர் அருட்சகோதரி மேரி சயந்தி ஆகியோரும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

நிறைவாக பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

G.P. பேர்மினஸ்

## யாழ் மறைக்கோட்ட பொதுநிலையினர் கழக செயற்குழுக் கூட்டம் 17.07.2016 இல் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

- ♦ பங்கு மட்டங்களில் பொதுநிலையினர் விழிப்புணர்வுக் குழுக்களை உருவாக்குதல் - உள்ளதை சீரமைத்தல்.
- ♦ பாடசாலை மற்றும் சமூக மட்டங்களில் நிலவும் சமூக, கலாசார சீரழிவுகளை கட்டுப்படுத்தும் முதற்படியாக பெற்றோர்களுக்கான சந்திப்பை மேற்கொள்ளுதல்
- ♦ தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறுவதை நிறுத்துதல்.
- ♦ பக்திச் சபைகளையும் ஒன்றிணைத்து கலந்துரையாடல்களை நடாத்துதல்.

– எஸ். யேசுதாஸ் செயலாளர். –

## யாழ் மறைமாவட்ட மறைக்கோட்டங்களுக்கான செயற்குழுத் தெரிவுகள்

யாழ் மறைமாவட்ட மறைக்கோட்டங்கள் மற்றும் யாழ் மறைமாவட்டத்திற்கான பொதுநிலையினர் கழக புதிய செயற்குழுத் தெரிவுகள் அண்மையில் நடைபெற்றன. யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குனர் அருட்பணி இ.ம.வி. இரவிச்சந்திரன் அடிகளின் வழிகாட்டுதலில் மேற்படி செயற்குழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

மறைக்கோட்ட ரீதியான செயற்குழுவின் பதவி நிலை உறுப்பினர்கள் விபரம்:

**யாழ் மறைக்கோட்டம்**

தலைவர் : சு.கெனறி - சுண்டிக்குளி
செயலாளர் : எஸ்.யேசுதாஸ் -கொழும்புத்துறை
பொருளாளர் : அ.இராசநாயகம் - குருநகர்
உபதலைவர் : யோ. சந்தியோ - நாவாந்துறை
உபசெயலாளர்: திருமதி சுகந்தினி றொபேட் - பேராலயம்

**பருத்தித்துறை மறைக்கோட்டம்**

தலைவர் : வின்சன்டிபோல் - பருத்தித்துறை
செயலாளர் : சூ.யோசப்வின்சன் - கரவெட்டி
பொருளாளர் : திருமதி செ. செபமாலையம்மா - சக்கோட்டை
உபதலைவர் : கு. மதுரநாயகம் - பொலிகண்டி
உபசெயலாளர்: ம. இளம்தேவன் - பளை

**இளவாலை மறைக்கோட்டம்**

தலைவர் : இ.அன்ரன் விமலதாஸ் - பண்டத்தரிப்பு
செயலாளர் : அ.டக்ளஸ் யோண்சன் - குழமங்கால்
பொருளாளர் : அ.ராஜசேகரன் - ஆனைக்கோட்டை

**தீவக மறைக்கோட்டம்**

தலைவர் : திருமதி க. திரேசாமலர் - மெலிஞ்சிமுனை
செயலாளர் : அ. அருள்ஜெகின் - அல்லைப்பிட்டி
பொருளாளர் : திருமதி லை. யுனிற்றா - சாட்டி
உபதலைவர் : நீ. சீமோன் ததேயு - மண்டைதீவு
உபசெயலாளர்: திருமதி யோ. மேரி லூசினா - நாரந்தனை

**கிளி - முல்லை மறைக்கோட்டம்**

தலைவர் : கி. றொபேட் - வலைப்பாடு
செயலாளர் : செ.யேசுபிரியேல் - கிளிநொச்சி
பொருளாளர் : திருமதி மே.குணசீலன் - புதுக்குடியிருப்பு
உபதலைவர் : பி. மதன்ராஜ் - கூழாமுறிப்பு
உபசெயலாளர்: ட. ஜெனிறொபின்சன் - பூநகரி

**யாழ் மறைமாவட்ட செயற்குழு**

தலைவர் : கி.றொபேட் - கிளிமுல்லை மறைக்கோட்டம்
செயலாளர் : எஸ்.யேசுதாஸ் - யாழ் மறைக்கோட்டம்
பொருளாளர் : அ. டக்ளஸ் யோண்சன் - இளவாலை மறைக்கோட்டம்
உபதலைவர் : திருமதி லை. யுனிற்றா - தீவக மறைக்கோட்டம்
உபசெயலாளர்: கு. மதுரநாயகம் - பருத்தித்துறை மறைக்கோட்டம்.

### நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

✷ பங்கு மட்டங்களில் பொதுநிலையினர் விழிப்புணர்வுக் குழுக்களை உருவாக்குதல் - உள்ளதை சீரமைத்தல்.

✷ பாடசாலை மற்றும் சமூக மட்டங்களில் நிலவும் சமூக, கலாசார சீரழிவுகளை கட்டுப்படுத்தும் முதற்படியாக பெற்றோர்களுக்கான சந்திப்பை மேற்கொள்ளுதல்

✷ தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறுவதை நிறுத்துதல்.

✷ பக்திச்சபைகளையும் ஒன்றிணைத்து கலந்துரையாடல்களை நடாத்துதல்.

**தகவல்: எஸ்.யேசுதாஸ்**
**செயலாளர் யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம்.**



# மரியாவின் காட்சிகள்

"வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது: பெண்ணொருவர் காணப்பட்டார்." - திவெ 1:1

மக்களின் மரியா பற்றிய சிந்தனைகளும் பக்தியும் இன்று பெரிதும் காட்சிகளையே மையமாகக் கொண்டிருக்கின்றன. மரியா என்றால் அவர்களுக்கு அது லூர்து, பாத்திமா, சலேத், கார்மேல் அல்லது வேளாங்கண்ணி மாதாதான். இன்று பரவலாகப் பயன்படுத்தப்படும் மரியாவின் படங்கள், திரு உருவங்கள் கூடக் காட்சியாளர்கள் கண்டதாக வர்ணிக்கும் தோற்றங்களிலேயே பெரும்பாலும் உருவாக்கப்பட்டுள்ளன.

மரியாவின் காட்சி அனுபவங்களுள் உலக அளவில் மிகவும் பெயர் பெற்றவை லூர்து, பாத்திமா, சலேத், கார்மேல், குவாடலூப்பே, வேளாங்கண்ணி, மெட்சிகோர்ஜ் என்பன. இவையே மரியாவின் மிக முக்கிய திருத்தலங்களாகவும் மரியா பக்தியின் மையங்களாகவும் விளங்குகின்றன. காட்சி அனுபவங்கள் மட்டுமல்ல, அவற்றில் மரியா கூறியதாகச் சொல்லப்படும் செய்திகளும் குறிப்பாக இரகசியங்களும் பெரும் பரபரப்பை ஏற்படுத்துவதும் உண்டு. இத்தகைய செய்திகளுள் பல நலமானவை; நம்பிக்கை, நல்லொழுக்கம், உலக அமைதி, செபம், தவம் எனும் நற்செய்தி விழுமியங்களை வலியுறுத்துபவை. ஆனால், வேறு சில கடவுளின் சினம், வரவிருக்கின்ற தண்டனை, உலக அழிவு எனச்சொல்லி மக்களிடையே தேவையற்ற பீதியையும் கலக்கத்தையும் ஏற்படுத்துபவை. பழமைவாதம், முதலாளியம் என்பவற்றை ஆதரிக்கும் சுயநல அரசியல் நேக்கங்களுக்குக் கூட மரியா காட்சிகளும் செய்திகளும் சில குழுமங்களால் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே, எல்லாக்காட்சி அனுபவங்களிலும் உண்மையானவை எவை, வெறும் கற்பனைகள் எவை எனத் தெரிந்து கொள்ள திருச்சபை தரும் சில அணுகுமுறைகளும் நெறிமுறைகளும் மிகுந்த பயனளிப்பவை.

முதலில், மரியா காட்சி அனுபவங்கள் ஏற்படுவது பெரும்பான்மையான மக்கள் நினைப்பதுபோல் அரிதானதோ பெரிதானதோ அல்ல. ஏனெனில் மூன்றாம் நூற்றாண்டிலிருந்தே அத்தகைய பல காட்சிகள் அனுபவங்கள் நிகழ்ந்துள்ளன எனத் திருச்சபை வரலாறு சான்றுபகர்கின்றது.

அன்றுமுதல் இன்றுவரை கத்தோலிக்க மக்கள் வாழும் பெரும்பான்மையான ஊர்களிலும் நகர்களிலும் மரியா காட்சி அனுபவம் பெற்றதாகக் கூறும் ஒருவரோ பலரோ இருக்கத்தான் செய்கின்றனர். காட்சிகள் சில உண்மையானவை. அதாவது, அவற்றின்வழி மரியா உண்மையிலேயே காட்சியாளருக்கு அனுபவமாகி, தனியாளுக்கோ திருச்சபைக்கோ சமூகத்திற்கோ இன்றைய சூழமைவிற்கு ஏற்ற முக்கியமான சில செய்திகளை வெளிப்படுத்துகிறார். இது மக்கள் நல்வாழ்வில் இன்றும் மரியாவுக்கு உள்ள அக்கறையின் தனி ஒரு வெளிப்பாடு. **(தொடரும்...)**

**துணைநின்ற நூல்கள் :-**
'அவள் பெயர் மரியா' 'இதோ உனது அம்மா'

**ம.அமல டனிஸ்ரன்**
**புனித மடுத்தீனார் குருமடம்**

## கார்மேல் அன்னையின் திருவிழாவும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினருடன் இணைந்து பணிபுரியும் துணை அங்கத்தவர்களின் நிரந்தர அர்ப்பணிப்பு நிகழ்வும்.



அப்போஸ்தலிக்க கார்மேல் சபை துறவியர், தமது பாதுகாவலியாம், கார்மேல் அன்னையின் பெயர் கொண்ட திருநாளை, அமைதியாகவும், மகிழ்வோடும், அர்த்தமுள்ள முறையிலும் கொண்டாடினார்கள். இவர்களுடன் இச்சபையில், இணைந்து செயற்படும் துணை அங்கத்தவர்களாகிய நாமும் அன்றைய நாளில் அவர்களுடன் இணைந்து அன்னையின் விழாத் திருப்பலியில் கலந்து கொண்டோம். நாம் அப்போஸ்தலிக்க கார்மேல் சபை கன்னியர்களுடன் இணைந்து செபத்திலும், அன்புப்பணியிலும், பொதுப்பணியிலும் இறைவனை, அவரின் அன்பை, சுவைத்து வருகின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது.

16.07.2016 அன்று இந்த பொதுநிலையினரின் துணை அங்கத்தவர்கள் அனைவரும் கார்மேல் அன்னைக்கு தம்மை நிரந்தரமாக அர்ப்பணித்த நிகழ்வு இடம்பெற்றது. அன்று மாலை 5 மணியளவில் அருட்தந்தை ஜீவபோல் (அ.ம.தி) அடிகளார் இத்துணை அங்கத்தவர்களுக்கு கார்மேல் சபையினரின் செப வாழ்வு பற்றியும் பணிவாழ்வு பற்றியும் எடுத்துக் கூறியதுடன் இவர்களுடன் இணைந்து செயற்படும் அங்கத்தவர்களாகிய எமக்கும் இச்செபத்திலும் பணியிலும் பங்கு உண்டு, என அழகாக எடுத்துக்கூறியதுடன் ஆழமான இறை அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள, நாம் செபத்தில் இறைவனுடன் இணைய வேண்டும் என்றும் எமது குடும்பங்களின் கடமைகளுடன் பிறரன்புப் பணியிலும், நாம் ஈடுபட எமக்குத் தேவையான நல்ல ஆலோசனைகளை வழங்கினார். தொடர்ந்து இச்சபையில் இணைந்துள்ள அங்கத்தவர்கள் இப்பணிவாழ்வின் மூலம் தாம் பெற்றுக்கொண்ட அனுபவங்களை மகிழ்வோடு பகிர்ந்து கொண்டார்கள்.

இதனைத் தொடர்ந்து அருட்தந்தை ஜீவபோல் அடிகளாரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்துணை அங்கத்தவர்கள் எரியும் தீபங்களைக் கையில் ஏந்தி குருவுடன் பவனி வர வருகைப்பாடலுடன் திருப்பலி ஆரம்பமானது. அர்த்தமுள்ள முறையிலும் பக்தியாகவும் இறை அருளை அனுபவிக்கும் முகமாகவும் இத்திருப்பலி அமைந்திருந்தது. மறை உரையின் பின்னர் 5 வருடங்களிலிருந்து 20 வருடங்கள் வரை இச்சபையில் இணைந்துள்ள அங்கத்தவர்கள் தமது வாக்குத்தத்தங்களைப் புதுப்பித்து, பொதுநிலையினராக இருந்து கார்மேல் சபையின் பணியில் பங்கெடுக்க தம்மை முழுமையாக அர்ப்பணித்தனர். திருப்பலியின் முடிவில் நிரந்தர அங்கத்துவத்திற்கு அடையாளமான ஆசீர்வதிக்கப்பட்ட கார்மேல் அன்னையின் உருவம் பதிக்கப்பட்ட உத்தரியத்தை யாழ்ப்பாணம் கார்மேல் மடத்தின் மேலாளர் அருட்சகோதரி ஜொய்ஸ்மாறி அவர்கள் அணிவித்தார். அனைவரும் பக்தியுடனும் மகிழ்வுடனும் அதைப் பெற்றுக் கொண்டனர். திருப்பலி முடிவில் சிறிய ஒன்றுகூடலுடன் அன்றைய நாள் நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றன.

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் துணை உறுப்பினர்களாக இணைந்து செயற்படும் எமக்கு ஒவ்வொரு மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் கார்மேல் கன்னியர் மடத்தில் செபமாலையும் தியானமும் மாதாந்த கூட்டமும் இடம்பெறும். இது எமது மடத்தின் மேலாளர் பராமரிப்பிலும் அருட்சகோதரி மேரி றொஷாந்தி அவர்களின் வழிநடத்தலிலும் இடம்பெறும். இம்மடத்திலுள்ள அனைத்து அருட்சகோதரிகளும் எமது இப்பணி வாழ்விற்கு உதவியாக உள்ளனர் என்று குறிப்பிடுவதிலும் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

**சபையின் செயலாளர்**
**திருமதி டெய்சி தவராஜா**

### காவலூர் தூய யாகப்பர்...

1ம் பக்க தொடர்ச்சி...

பங்கு மக்களால் மாலையிட்டு நாதஸ்வர மேளம் முழங்க ஆலய முன்றல் வரை பவனியாக வரவேற்கப்பட்டார். ஆலய முன்றலில் இரண்டு நூற்றாண்டுகள் கத்தோலிக்க பாரம்பரியத்தைக் கொண்ட தற்போதைய ஆலயத்தின் அடிக்கல் நாட்டு நிகழ்வின் நினைவுச் சின்னத்தைத் ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார்.

தொடர்ந்து ஆயர் தலைமையில் இணைந்து திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து தூய யாகப்பர் அரங்கில் யூபிலி விழா சிறப்பு மலர் வெளியீடு இடம்பெற்றது. அரங்க நிகழ்வின் முதல் நிகழ்வாக யாழ்/ ஊர். தூய மரியாள் றோ.க.மகளிர் வித்தியாலய மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது. தொடர்ந்து, ஆசியுரைகளும், வாழ்த்துரைகளும், யூபிலி மலர் வெளியீடும் இடம்பெற்றன. இறுதியாக காலை உணவுடன் காலை நிகழ்வுகள்யாவும் நிறைவடைந்தன.

மீண்டும் மாலை நிகழ்வாக தூய யாகப்பரின் திருச்சுரூபப்பவனி மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகி திருச்சுரூப ஆசீருடன் நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த குருக்கள் துறவியர்களும், வெளிநாடுகளில் இருந்தும், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த மக்கள் ஒன்று கூடியிருந்ததுவும் மிக மகிழ்ச்சிக்குரியதாகும். இந் நிகழ்வுகள் அனைத் தும் பங்குத்தந்தை, உதவிப் பங்குத் தந்தை வழி காட்டலில் இனிதே நடந்தேறியது குறிப்பிடத்தக்கது.

**ஏ.வீர்ஜினி**

### பிரிவினை சபைகளால்...

1ம் பக்க தொடர்ச்சி...

இந்நிலையில் தமக்கு உதவிக்கரம் நீட்டி தமது கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

### பாவசங்கீர்த்தன அருட்...

1ம் பக்க தொடர்ச்சி...

மேய்ப்புப்பணி மாநாடு வழிகாட்ட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அத்தோடு பாடசாலைகளில் கத்தோலிக்க மாணவர்கள் தமது கத்தோலிக்க பாடத்தைக் கற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளும் செய்யப்படவேண்டுமெனவும் அங்கு நடைபெற்ற கருத்தமர்வின்போது சுட்டிக் காட்டப்பட்டது.

### யாழ். மறைமாவட்ட குரு முதல்வர்...

1ம் பக்க தொடர்ச்சி...

யடைய ஆயத்தமாகுமாறும் அழைப்புவிடுத்தார்.

இடறலான கண்ணைப் பிடுங்குவதுபோன்ற, இடறலான காலை வெட்டுவதுபோன்ற வேதனைகளினூடாகவே புதுப்பித்தல் சாத்தியமாகு மேயொழிய நாம் எமது நிலையிலேயே சௌகரியமாக இருந்துகொண்டு எம்மைப் புதுப்பித்துக் கொள்ளலாம் என எண்ணுவது எதுவித பலனையும் கொடுக்காது என்பதையும் தெளிவுபடுத்தினார்.


## நீங்காத நினைவுகள்

**50ம் வருட நிறைவின் நினைவு** | **42ம் வருட நிறைவின் நினைவு**





**சந்தியோ அந்தோனிப்பிள்ளை**
அன்னை மடியில் 26.12.1908
ஆண்டவன் அவனியில் 15.08.1966

**அன்னம்மா அந்தோனிப்பிள்ளை**
அன்னை மடியில் 01.04.1914
ஆண்டவன் அவனியில் 12.08.1974

**"சீவியத்தில் நேசித்த உங்கள் இருவரையும் மரணத்திலும் மறவோம்"**

அம்மை அப்பன் உங்கள் அன்பே நிரந்தரம்
மாறும் உலகில் மாறா அன்பே நிரந்தரம், நிரந்தரம்.
அன்புடன் எமை பெற்று வளர்த்து பொலிவுடன் விளங்கச்
செய்த பொன்னொளி மறைந்து ஆண்டுகள் 50 ஆகியதே

வழிகின்ற விழிநீரில் வதனம் பூக்க
வரலாறாய் எம் நெஞ்சில் என்றும் வாழ்வீர்கள்!
இறைவனது திட்டமதை ஏற்று நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்களே!
சரிந்த மனங்களுடன் அஞ்சலி செலுத்துகின்றோம்

இவர்களின் ஆன்மாக்கள் நித்தியமும் இறைவனில் இளைப்பாற வேண்டி 12.08.2016 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

42/5, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணம்.
Advt-79/16
என்றும் மறவாத நினைவுகளில் குடும்பத்தினர்


### மறைமாவட்ட குருக்களின்...

2ம் பக்க தொடர்ச்சி...

வாழ்ந்து பசியிலும் களைப்பிலும் கவலையிலும் உயிர் துறந்த சறத்ஜீவன், கடைசி வேளையிலும் போராளிகள் சரணடைய உதவியதால் அவர்களோடே காணாமல் ஆக்கப்பட்ட பிரான்சிஸ் யோசவ். இக்குருமணிகள் அனைவரும் தமது பலங்கள் பலவீனங்களோடு நல்லாயனின் வழிநின்று தமது மறைமாவட்ட குருத்துவத்தை வாழ்ந்து முடித்தவர்களே.

அதேபோல எமது மறைமாவட்டத்தின் முதல் மறைமாவட்டக் குருவாகிய பிரான்சிஸ் சவுரிமுத்து தொடக்கம் வன்னிக்கிராமங்களில் முகமிழந்த மக்களுடன் தம்மைக் கரைத்து வாழ்ந்துவரும் இளம் குருக்கள்வரை பெயருமின்றி புகழுமின்றி தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தைகளுக்காக தம்மையே கரைத்துக் கொள்ளும் மறைமாவட்டக் குருக்கள் பலர் இருக்கின்றனர். இவர்களுக்கென ஒரு வாழ்வு முறையுண்டு. இவர்களுக்கென ஒரு ஆன்மீகம் உண்டு. அது நல்லாயனின் ஆன்மீகம். ஒரு மேய்ப்புப்பணி ஆன்மீகம். தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களுக்காக தன்னையே கையளிக்கும் ஒரு லோக்கல் (Local) ஆன்மீகம்.

**போரின் பின்னான காலம்.**

போரின் பின்னான இக்காலம் எமது மக்களை போரின் ஆறாத வடுக்களோடு அவமானமும் அவலங்களும் நிறைந்த ஒரு சூழலுக்குள் தள்ளியிருக்கிறது. உரிமைகள் மறுக்கப்பட்ட நிலை தொடரும் அதேவேளையில் வர்ணமயமான ஒரு மாய உலகுக்குள் நாம் தள்ளப்படுகிறோம். காணாமல் போனவர்களின் உறவுகள், சிறையில் வாடுபவர்கள், சித்திரவதைக் கூடங்களிலே அவலப்படுபவர்கள். காணிகளை இழந்திருப்போர். இவர்களின் அவலங்கள் இலகுவாக கடந்து போகப்படுகிறது. இராணுவ மயமாக்கல், பௌத்த மயமாக்கல் என்பன சாதாரணமானவையாக ஏற்கப்பட்டு இலகுவாக ஜீரணிக்கப்படுகின்றன. கிறிஸ்தவ வாழ்வு ஆலய கட்டுமானங்களுக்குள்ளும் புனரமைப்புக்குள்ளும் திருவிழாக் கொண்டாட்டங்களுக்குள்ளும் இந்தியாவிலிருந்து வருகை தருபவர்களுடைய வழிபாடுகளுக்குள்ளும் சுருக்கப்படுகிறது.

இந்நிலையில் மறைமாவட்டக் குருத்துவத்திற்கு ஒரு பாரிய ஆபத்து காத்திருக்கிறது. உலகமயமாகி வரும் போக்கில் அள்ளுண்டு நாமும் இன்றைய நவீன தொலைத்தொடர்பு இணையக் கலாசாரத்தில் மூழ்கிப்போகும் நிலை காணப்படுகிறது. மாயைகளையும் உண்மைகளையும் பகுத்தறிந்து சரியான திசையில் மக்களை வழிநடத்த வேண்டிய பணி காத்திருக்கிறது. இல்லாதுபோனால் சிங்கங்களிடமும், ஓநாய்களிடமும் மந்தைகளைப் பறிகொடுத்து விடும் போலி மேய்ப்பர்களாக நாம் மாறிவிடுவோம். அதுமட்டுமல்ல மந்தைகளையே மேயும் பொல்லாத ஆயன்களாகவும் மாறி விடுவோம்.

### அருட்சகோதரர்களினால் முன்னெடுக்கம்....

1ம் பக்க தொடர்ச்சி...

முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாக அமையும். இயன்றவரை எமது மறைமாவட்டத்திலுள்ள எல்லா மக்களையும் சந்தித்து மேய்ப்புப்பணி மாநாடுபற்றியும் புதுப்பித்தலின் முக்கியத்தவம் பற்றியும் எடுத்துரைக்க இக் காலப்பகுதியில் அருட்சகோதரர்கள் முயற்சி செய்வார்கள். யாழ். மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடுக் குழுவினரால் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே எம்மோடு ஒன்றாக வாழ்ந்து, மகிழ்ந்து உருவாக்கம் பெற்ற இக்குருக்களின் வெள்ளிவிழாவை மகிழ்வோடு கொண்டாடும் மறைமாவட்டக்குருக்களாகிய நாம் எமது மேய்ப்புப்பணிக்கான அழைப்பை மீள ஒருமுறை சிந்தித்துக் கொள்வோம். எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை அன்பு செய்து அவர்களை அறிந்து அவர்களை துன்ப வேளைகளில் தேற்றி, இன்ப வேளைகளில் அவர்களோடு மகிழ்ந்து தொலையும் போது தேடிச்சென்று பராமரித்து வழிகாட்டி அவர்களோடு வாழ்ந்து அவர்களுக்காகவே மரணிக்கும் எம்முடைய மேய்ப்புப் பணிசார் உள்ளூர் குருத்துவத்தின் தன்மையை (Local Priesthood) புரிந்து கொள்வோம். இயலுமானவரை Local ஆக வாழ முன்வருவோம்.


## விண்ணக வாழ்வில் 50 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 05 - 04 - 1919

விண்ணில் 12 - 08 - 1966



அமரர்
**மனுவல் அகஸ்ரின் அன்ரனி (தவசெல்வம்)**
(முன்னாள் அரசாங்க வன இலாகா அதிகாரி)
(Forest Dept Overseer)

ஆண்டுகள் 50 கடந்திடினும் ஆறிடுமோ எம் நெஞ்சங்கள்
வழிகின்ற விழிநீரில் வதனம் பூக்க
வரலாறாய் எம் நெஞ்சில் என்றும்
வாழ்வாய் இறைவனது திட்டமதை
ஏற்று நீர் இறைவனடி சேர்ந்தாயே அப்பா!
சரிந்த மனங்களுடன் அஞ்சலி செலுத்துகிறோம்.

Advt-81/16

"அக்னஸ் அகம்"
118, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்.

# பொருள் முதல் வாதம் கொண்ட உலகிற்கு பெரும் சாட்டையாக விளங்கியவர் தூய சந்தியாகு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை

இளவாலை புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருவிழா 25.07.2016 அன்று கொண்டாடப்பட்ட வேளை திருவிழாத் திருப்பலிக்குத் தலைமை தாங்கி அருளுரையாற்றிய மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி.விக்ரர் சோசை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் குறிப்பிடுகையில் கடவுள் நமக்கு உலக வாழ்வினை ஒரு பெருங் கொடையாகத் தந்துள்ளார். நாம் வாழும் பூமியும் அதில் உண்டானது அனைத்தும் கடவுளின் மாபெரும் கொடையே. இப்படைப்பை அலங்கரிக்கும் காரணிகள் பல உள்ளன. நாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப, படைப்பை செயல்களில் முதன்மையானது எது? என நாம் சிந்திக்க வேண்டும். கடவுளால் அருளப்பட்ட இவ்வுலக வாழ்வை, மனிதன் மனம்போன போக்கில் எப்படியும் வாழலாம் என எண்ணாது, உத்தமமான மனித வாழ்விற்கு மெருகூட்டும் மேலான காரியம் எது என ஆய்ந்தறிய வேண்டும். அதாவது கிறிஸ்துவின் வாழ்வு கிறிஸ்தவர்களாகிய எங்களின் வாழ்விலும் வாசம் செய்வதே முதற்கொடை. தூய பவுல் கூறுவது போன்று (2கொரி:4-15) மட்பாண்டங்களுக்கு இணையான நாங்கள், ஈடுஇணையற்ற கடவுளின் கொடையாகிய கிறிஸ்துவை எங்களில் கொண்டிருக்கின்றோம். கிறிஸ்துவின் திருமுகத்தில் வீசும் கடவுளின் மாட்சியாகிய அறிவொளியை வல்லமையாக எம்மில் தாங்கியுள்ளோம். ஆதலால் எமது வாழ்வு எத்தகைய இன்னல்களாலும் உடைந்து போகக் கூடாது. இதனை தாம் நற்செய்தி அறிவித்த இடங்களிலும், சிறப்பாக ஸ்பானியா தேசத்திலும் முதன்மைப்படுத்தி சான்றுபகர்ந்து, திருத்தூதர் அணியில் முதல் வேத சாட்சியாக மரித்தவர்தான் திருத்தூதரான தூய யாகப்பர்.

எனவேஅவரை எம் வாழ்வின் முன்மாதிரிகையாக, பாதுகாவலராகக் கொள்ளும் நாம், அவரில் துலங்கிய துணிவான விசுவாச வாழ்வினை எம்மிலே பிரதிபலிக்க வேண்டும். நற்செய்திப் பணி வாழ்வில் எதிர்கொள்ளும் மன உடைவுகள், நம்பிக்கை இழப்புக்கள், துன்புறுத்தல்கள், கைவிடப்படுதல்கள் போன்ற நிலைகளால் விரக்தியுறாது, துணிவோடு இயேசுவின் இரக்கச் செயல்களை எம் வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும். பொருள் முதல் வாதம் கொண்ட உலகில் இன்றைய மனிதன் சிக்குண்டுள்ளான் என்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மை. எனினும் தீமையை எதிர்த்து இறை இரக்கத்தின் நற்செய்திக்கு உயிர் உள்ள வரை சான்றுபகர்ந்து திருச்சபைக்கு ஒளியூட்டியவராக விளங்கிய தூய யாகப்பரின் வாழ்வு எம் வாழ்வில் உறுதியாக்கப்பட வேண்டும்.

இவ் இரக்கத்தின் யூபிலி ஆண்டில் பலவற்றில் பரபரப்பாக ஈடுபடும் நாம் எம் வாழ்வின் புதுப்பித்தலுக்காகச் செய்த இரக்கச் செயல் என்ன? என்பதை அன்றாடம் எம்மிலே கேட்டுத் தினமும் சிறிய சிறிய இரக்கச் செயல் புரிந்து எம்மையும், எமது சமுதாயத்தையும் மாற்றி அமைப்பவர்களாக விளங்க வேண்டும். சமகால சமூகத்தில் நாம் முகங்கொடுக்கும் வன்முறைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாயின் கிறிஸ்துவின் திருமுகத்தில் துலங்கிய இரக்கம்மிகு பண்புகளை ஒருவர் ஒருவருக்கு எமது உண்மையான நீதியான செயல்களால் வெளிப்படுத்தி வாழவே இவ் இரக்கத்தின் யூபிலி ஆண்டு அழைப்பு விடுப்பதுடன் நாம் மேற்கொள்ளும் திருவிழாக்களும் சாட்சியமுடையதாக விளங்கும் எனக் குறிப்பிட்டார்.

மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அவர்களும் தமது குருத்துவ வெண்யூபிலி விழாவை இவ்வாண்டில் நினைவுகூர்பவராக விளங்குவதால் பங்குத்தந்தையினதும் பங்குமக்களினதும் வாழ்த்தும் செபங்களும் அவருக்கு அளிக்கப்பட்டது. விழா நிகழ்வுகள் யாவும் பங்குத்தந்தை ம.யேசுரட்ணம் அடிகளாரின் தலைமையில் சிறப்புற இடம்பெற்றது. நவதினங்களுக்குரிய தியான மறையுரைகளை அருட்பணி. செபஸ்ரியன் றெவல் (அமதி) அவர்கள் அர்த்தமுள்ள முறையில் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தகவல்:
**S.M. வுளோறன்ஸ்,**
**(இளவாலை)**

**வெறுப்பது யாராக இருந்தாலும்... நேசிப்பது நீங்களாக இருங்கள்...!**
-அன்னை தெரசா

## 05.06.2016 அன்று புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெற்ற "குருநகர் புனித யாகப்பர் ஆலய புனித வின்சென்டிபோல் சபை" பெண்கள் பந்தியின் 27வது வருடாந்த பொதுக்கூட்டப்பதிவுகள்

விருந்தினர் அழைத்து வரப்படுகின்றனர்.



பங்குத்தந்தை J.J. மெளலிஸ் புனித வின்சென்டிபோல் திருச்சுரூபத்திற்கு மாலை அணிவிக்கின்றார்.



நிகழ்வில் பங்கு கொண்டோர்.




*எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்த சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் நிலைத் திருப்பேன் என உறுதி கூறுகின்றேன். நானும் என்னில் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.*

*"பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி"*
*ஆமென்.*

Advt-80/16

**உமது அடியாள்**

## பூநகரி, பள்ளிக்குடா மக்களை அருட்சகோதரர்கள் சந்தித்த போது...



அருட் சகோதரர்களினால் முன்னெடுக்கப்படும் மேய்ப்புப்பணி மாநாட்டு விழிப்புணர்வு பங்குத்தரிசிப்பின் முதலாவது கட்டமாக ஒரு குழுவினர் கடந்த 4ம், 5ம் திகதிகளில் பூநகரி பங்கைத்தரிசித்தார்கள். பள்ளிக்குடா, கௌதாரிமுனை ஆகிய இடங்களிலுள்ள சுமார் 110 குடும்பங்களை அவர்களுடைய வீடுகளில் தரிசித்ததுடன், குழு கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்கள்.

Catholic Press Mail Address
catholicpressjaffna@hotmail.com

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2016 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.